2015 ஆகஸ்ட் 25]

என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***47282—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் புதியதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மாட்சிமைதாங்கிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டத்திலேயே மிகப் பெரிய தொழில்நகரம் ராஜபாளையம் ஆகும். 200—க்கும் அதிகமான நூற்பாலைகளும், மருத்துவத் துணிகள் என்று அழைக்கப்படுகின்ற* bandage cloth *உற்பத்தி செய்கின்ற 50—க்கும் அதிகமான தொழிற்சாலைகளும் அந்தப் பகுதியிலே உள்ளன. இந்தத் தொழிற்சாலைகளிலே பணிபுரிய ராஜபாளையம் பகுதியில் இருந்து பத்தாம் வகுப்பு மற்றும் +2 வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற*

ஏழையெளிய நடுத்தர வகுப்பைச் சார்ந்த மாணவ மாணவிகள் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில் கல்வி பயில அருகில் உள்ள நகரங்களுக்கோ அல்லது மாவட்டங்களுக்கோ செல்லவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, ராஜபாளையம் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை 41 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 34 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 414 சுய நிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. மற்றபடி மத்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கம் வழியாக தனிப்பட்ட முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய* Film Institute, Labour Institute and Hotel Management Institute *போன்று 20 கல்வி நிலையங்கள் இருக்கின்றன. ஆக மொத்தம், தமிழகத்திலே 509 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. 2 இலட்சத்து 15 ஆயிரத்து 652 மாணவர்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கான அனுமதி பெற்ற இடங்கள் இருக்கின்றன. ஆனால், 1 இலட்சத்து 12 ஆயிரத்து 819 மாணவர்கள் மட்டுமே அங்கு கல்வி பயின்று வருகின்றனர். ஆகவே, மாணவர்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க கூடுதலாக 1 இலட்சம் இடங்களுக்குமேல் இருக்கின்றன. அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்து இருக்கக்கூடிய ராஜபாளையம் தொகுதியிலேகூட பி.ஏ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக் என்ற உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது. அங்கேகூட அரசு நிர்ணயித்த கட்டணம்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையிலே, நான்கு கல்லூரிகள் அவர்கள் சார்ந்திருக்கிற ராஜபாளையம் தொகுதியில் இருக்கின்றன. மாணவர்கள் சேர்க்கை எவ்வளவு என்று சொன்னால், 6,860*

2015 ஆகஸ்ட் 25]

மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு அங்கே இடங்கள் இருக்கின்றன. ஆனால், தற்போது 3,650 மாணவர்கள்தான் அங்கே கல்வி பயின்று வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையான, கூடுதலான மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் அங்கே இருக்கின்றன. ஆகவே, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்க ஆர்வம் உள்ள மாணவர்கள் அங்கே சேர்ந்து கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால், புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம்

***47600 திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் இருக்கை நோக்கி வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட காரமடை பகுதியில்